00498

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக்கல்வி நிகழ்ச்சித்திட்டம் - 2023/2024

இறுதிப்பரீட்சை

மட்டம் - 05

**EPU5551 – ஆரம்பக் கல்விக்கான கல்வி அடிப்படைகள்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 08.06.2025 நேரம்:மு.ப 09.30 - பி.ப 12.30

**பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்குக.**

## பகுதி – I

1. "கல்வி" என்ற பதத்தை பொருத்தமான வரைவிலக்கணத்துடன் சுருக்கமாக விளக்குக.
2. கல்விக் கோட்பாடு (Educational Theory) என்றால் என்ன.
3. கலாச்சாரத்திற்கும் சமூகமயமாக்கலுக்கும் இடையிலான உறவை விளக்குக.
4. இலங்கையில் ஆரம்பக் கல்வியில் உள்ள **மூன்று (03)** போக்குகளை (Trends) கூறி அவற்றில் **ஒன்றைச் (01)** சுருக்கமாக விளக்குக.
5. முறைசாராக் கல்விக் கருத்தை விபரிக்குக.
6. இலங்கையில் கல்விக்கும் வளர்ச்சிக்கும் இடையிலான உறவைச் சுருக்கமாக கலந்துரையாடுக.
7. பாடத்தின் கற்றல் பேறுகள் (Learning Outcomes) என்று நீங்கள் எதனைக் கருதுகிறீர்கள்? சுருக்கமாக விபரிக்குக.
8. ஆரம்ப சமூகமயமாக்கலின் **ஐந்து (05)** நன்மைகளைக் கூறி அவற்றில் **ஒன்றைச் (01)** சுருக்கமாக விளக்குக.

(05 x 08 = 40 புள்ளிகள்)

## பகுதி – II

9. i. மரியா மொண்டிசோரியின் முக்கிய தத்துவார்த்தக் கருத்துக்கள் **மூன்றினைக் (03)** குறிப்பிடுக.

(03 புள்ளிகள்)

ii. இலங்கையில் ஆரம்பக் கல்வி பாடத்திட்டத்தின் வளர்ச்சிக்கு மேற்கூறிய கருத்துக்கள் எவ்வாறு பங்களிக்கின்றன என்பதை விமர்சன ரீதியாகப் பகுப்பாய்வு செய்க.

(08 புள்ளிகள்)

iii. இலங்கையில் ஆரம்பக் கல்வி வகுப்பறையில் செயற்பாடுகளை ஒழுங்கமைத்து செயற்படுத்தும் போது, மரியா மொண்டிசோரியின் சிந்தனைகளை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை உதாரணங்களுடன் விபரிக்குக.

(09 புள்ளிகள்)



15

10. i. இரண்டாம் நிலை சமூகமயமாக்கல் என்ற கருத்தைச் சுருக்கமாக விவரிக்குக.

(05 புள்ளிகள்)

ii. பிள்ளைகளுக்கு சமூகமயமாக்கல் வாய்ப்புக்களை பாடசாலை அமைப்பிற்குள் வழங்கும் போது, ஆரம்பப் பாடசாலை ஆசிரியரின் பொறுப்புக்கள் என்ன என்பதனை உதாரணங்கள் மூலம் விளக்குக.

(07 புள்ளிகள்)

iii. "ஆரம்பப் பாடசாலைப் பிள்ளைகளின் ஆளுமை விருத்திக்கு சமூகமயமாக்கல் மிகவும் முக்கியமானது"

மேற்கண்ட கூற்றுடன் உடன்படுகின்றீர்களா? உங்கள் பதிலுக்கான **நான்கு (04)** காரணங்களைத் தருக.

(08 புள்ளிகள்)

11. i. விழுமியங்கள் என்றால் என்ன? பொருத்தமான வரைவிலக்கணம் மூலம் விளக்குக.

(06 புள்ளிகள்)

ii. கல்வி அமைப்பில் விழுமியத்தின் **மூன்று (03)** செயற்பாடுகளை விபரிக்குக.

(07 புள்ளிகள்)

iii. ஆரம்பப் பாடசாலை ஆசிரியராக, ஆரம்ப பாடசாலை பிள்ளைகளின் தார்மீக விழுமியங்களை விருத்தி செய்வதற்கு நீங்கள் பயன்படுத்தும் உத்திகள் யாவை?

(07 புள்ளிகள்)

12. i. "வாழ்நாள் நீடித்த கல்வி" (Lifelong Education) என்ற பதத்தை விளக்குக.

(05 புள்ளிகள்)

ii. வாழ்நாள் நீடித்த கல்விக்கும் கற்றல் சமூகத்திற்கும் இடையிலான தொடர்பை விமர்சன ரீதியாகப் பகுப்பாய்வு செய்க.

(07 புள்ளிகள்)

iii. வாழ்நாள் நீடித்த கல்வி என்ற கருத்து சமூகத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் ஏன் முக்கியமானது? **நான்கு (04)** உதாரணங்களுடன் விவரிக்குக.

(08 புள்ளிகள்)

13. பின்வருவனவற்றில் ஏதேனும் **இரண்டு (02)** பற்றி சிறு குறிப்புக்களை எழுதுக.

i. ஜோன் டூயியின் (John Dewey) தத்துவார்த்தக் கருத்துக்கள்
ii. இலங்கை சமூகத்தில் சமூக வர்க்கம் (Social Class)
iii. இலங்கையில் முறைசாராக் கல்வி (Non – Formal)
iv. அறிவதற்கான கற்றல் (Learning to know)

(10 x 02 = 20 புள்ளிகள்))

- முழுப்பதிப்புரிமையுடையது -



17